# இயல் - நான்கு

# சமூகவியல்

# 4. சமூகவியல்

மனித வாழ்வு ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து காணப்படுவதாகும். சொந்த பந்தங்கள், உற்றார் உறவினர்களோடு சூழப்பட்ட சோலையில் பூத்துக் குழுங்கும் மலர்களைப் போன்றது மனிதர்களின் வாழ்க்கை நிலை. மனிதர்கள் யாவரும் ஒரே சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்று இறைவன் கூறுகிறான். இதனை இவ்இயல் பகர்கிறது.

**ஒற்றைக் குடும்பம்**

மனிதகுலம் முழுமையையும் ஒரே சமுதாயமாகவும் ஒரே குடும்பமாகவும் இஸ்லாம் பார்க்கிறது.

> உங்களின் இந்தச் சமுதாயம் உண்மையில் ஒரே ஒரு சமுதாயமே. மேலும் நானே உங்களின் அதிபதி... எனவே நீங்கள் எனக்கே அடிபணியுங்கள்
> (21:92)

என்று திருமறையில் இறைவன் கூறுகிறான். மனித உறவை,

> இஸ்லாம் மானுடம் முழுமைக்குமான நெறி, ஒரு குறிப்பிட்ட சாரார் சொந்தங்கொண்டாட முடியாத உலக நெறி என்பதையும் உறுதி செய்கிறது. படைப்புகள் அனைத்தும் இறைவனின் குடும்பமாகும். அவற்றை நேசிப்பவனே இறைவனை நேசிப்பவனாவான் (நூல்:ஃபைஹகி)

என்று அண்ணல் நபி (ஸல்) அவர்களும் மானுட சமுதாயத்தை ஒற்றைக் குடும்ப உறவாக்கினார். “மனிதனை மனிதன் நேசிப்பது இறை நேசத்திற்கும் நெருக்கத்திற்கும் உரிய வழி என்று, சமுதாய உறவை ஆன்மீக நெறியின் அடித்தளமாக்குகிறார். இந்த மனித நேசிப்பு என்பது மனித மாண்புகளைப் பேணுவதன் மூலம் மட்டுமே உறுதி செய்யப்படும்”[1] என்றுரைக்கிறார் அப்துஸ் ஸமது.

**மனித மாற்றம்**

மனிதன், பிறப்பு, நிறம், மொழி, பொருளாதாரம், அதிகாரம், ஆகியவற்றால் தன்னிலையை மாற்றிக் கொள்கின்றான். ஆனால் மனிதன் பொதுவாகச், சமூக ஒற்றுமை இறையச்சத்தின் அடிப்படையில் வளர்கின்றது. பல்வேறு நாடுகள் பல மொழிகளில் பேசி கொண்டிருக்கும் மனிதர்கள் தங்களின் பண்புகளை மேலோங்கச் செய்ய வேண்டுமாயின் அவர்கள், இறைவழி பாட்டின் மூலம், இணையக்கூடிய நிலையினைக் கொண்டாவர்களாக இருக்க வேண்டும்.

அப்படி இணையப்படும் போது மனிதன் ஒரே சமூகத்தினராகவே தம்மைக் கருதி கொள்வான், அதுவே உண்மையாகும். இஸ்லாத்தில் மனிதன் பிறப்பால் ஒரே தாய் தந்தையரைக் கொண்டவன் என்பதற்குச் சான்றாக இறைவன் திருமறையில்,

> மனிதர்களே, நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும்
> பெண்ணிலிருந்தும் படைத்தோம் (49:13)

என்கிறான். இவ்வசனத்தின் மூலம் மனிதர்கள் யாவும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் எனக் கருதப்படுகின்றது என்பது உறுதியாகிறது. மேலும் அனைத்து உயிரினங்களும் இறைவனின் குடும்பமாகவும் அவற்றை அனைவரும் நேசிக்க வேண்டும் என்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்,

> படைப்புகள் அனைத்தும் இறைவனின் குடும்பமாகும்
> அவற்றை நேசிப்பவனே இறைவனை
> நேசிப்பவனாவான்[2] (நூல்: பைஹகி)

என்று கூறுகின்றார்கள்.

**மனித உணர்வுகள்**

சமூகத்தில் மனிதன் தன் வாழ்க்கையின் நிலையினை மட்டும் உணர்ந்து செயல்படாமல் பிற மனிதர்களின் உணர்வுகளை மதித்து நடத்தல் அவசியமானதாகும், "ஒரு மனிதனின் உணர்வுகள் சக மனிதனால் மதிக்கப்பட வேண்டும். இன்று குடும்ப உறவில் இருந்து பிற சமயத்தார் உறவு வரை காயப்பட்டுக் கிடப்பதற்கு அவரவர் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமையே காரணம் எனவே அடுத்தவர் உணர்வுகளுக்கு அண்ணலார் வழங்கிய மதிப்புகளை வாழ்வியலாக்கும் போதுதான் மனித மாண்புகள் உயிர்பெறும். அதன் மூலம்

ஆரோக்யமான குடும்ப - சமூக உறவுகள் வலுப்பெறும்[3] என்கிறார் அப்துஸ் ஸமது.

சக மனிதர்களின் உணர்வுகளை அறிந்து நடப்பதே மனிதனின் வாழ்வியல் நிலையாக அமைகிறது. இதில் மாற்றம் ஏற்படும் போது அவை சமூகத்தில் தனித்து காணப்படுகின்றன. ஒரு கூட்டமைப்பில் பல குடும்பங்கள், சேர்ந்து வாழும் குழுக்கள் சமூகம் ஆகும். நகரங்களைக் காட்டிலும் கிராமங்களில் மக்கள் ஒற்றுமையாக, கூட்டாக வாழ்வதைக் காணதுடிகிறது. இவ்வாழ்க்கையில் மனிதர்கள் ஒருவருக்கொருவர் தம் உள்ள உணர்வுகளைப் பரிமாறிக் கொண்டு சிறப்பானதொரு வாழ்க்கையினை மேற்கொள்கின்றனர்.

**இஸ்லாமும் சமூகமும்**

இஸ்லாமிய வாழ்வியலில் இறைவன் சமூகத்தைப் பற்றி பல இடங்களில் கூறுகின்றான், "இறைவன் ஒருவனே! அவனே அகிலத்தையும் அகிலத்தாரையும் படைத்தான். எனவே, அனைத்து நாடுகளும், அனைத்து மனிதர்களும் சமமே, இறைவனின் வழி காட்டுதலும் அனைவருக்கும் பொதுவானதே!"[4] என்று வேத வரிகளும் தூதர் மொழிகளும் என்ற நூல் மொழிகின்றது.

இறைவன் மனிதர்கள் யாவரையும் ஒரே ஆன்மாவிலிருந்து படைத்துள்ளான் என்று திருமறை மொழிகிறது. இதனை,

> மனிதர்களே, உங்கள் அனைவரையும் ஓர் ஆன்மாவிலிருந்து படைத்த உங்களின் இறைவனுக்கே நீங்கள் அஞ்சுங்கள் (4:1)

எனும் வசனம் காட்டுகிறது. எனவே இறைவனது படைப்பில் இஸ்லாமிய மார்க்கத்தின் படி உலகத்தில் ஆண், பெண் இருவரைக் கொண்டு படைக்கப் பெற்ற மக்கள் ஒரே சமூகத்தினரே என்று அறியப்படுகிறது.

**படைப்பினங்களில் ஏற்றத்தாழ்வுகள்**

மனிதன் படைக்கப் பெற்றப்பின் அவன் பல நிலைகளில் தனது சந்ததியினரைப் பெருக்குகின்றான். இப்படி எண்ணிக்கைகளில் பெருகும் மக்கள் நாளடைவில் பெரும் குழுக்களாகவும், சமூகங்களாகவும் தோன்றிப் பல இடங்களுக்குக் குடியேறி ஆங்காங்கே வாழ்க்கையினை மேற்கொள்கின்றனர்.

இவ்வாறு வாழக்கூடிய மக்கள் தங்களின் தட்பவெப்பநிலை மற்றும் இயற்கை சூழலுக்கேற்பத் தங்களது வாழ்வில் பல மாற்றங்களை அடைகின்றனர், இதில், உடல், நிறம், உணவு, பழக்கவழக்கம், வாழும் சூழ்நிலை மாற்றங்கள் இது போன்ற நிகழ்வுகளைப் பெறுகின்றனர். இதனை முகம்மது நபி (ஸல்) அவர்கள்,

> கறுப்பரைவிட வெள்ளையரோ, வெள்ளையரை விட கறுப்பரோ சிறந்தவரல்லர்; அரபியரை விட அரபியல்லாதவரோ, அரபியல்லாதவரைவிட அரபியரோ சிறந்தவரல்லர். இறையச்சம் உடையவரே உங்களில் சிறந்தவர்[5]

எனக் கூறுகின்றார்கள். ஒருவர் மற்றவரைக் காட்டிலும் சிறந்தவரும் இல்லை; அவரைவிடத் தாழ்ந்தவரும் இல்லை. இது அனைத்து மக்களும் இறைவனின் படைப்பில் சமம் என்ற நிலையினை எடுத்துக்காட்டுகின்றது. பொதுவான முறையில் மக்களின் மீது எவ்வாறு நடந்து கொள்வது என்று நபி (ஸல்) கூறுகையில்,

> யார் மக்களுக்குக் கருணை காட்டுவதில்லையோ அவருக்கு அல்லாஹ்வும் கருணை காட்டுவதில்லை[6]

என்பதாய் மொழிகிறார்கள். மக்கள் அனைத்துச் சமூகத்தினர் மீதும் அன்பினை செலுத்த வேண்டும். அவ்வாறு அன்பு, கருணை, இறக்கம் போன்றவைகளும் பிற மக்களின் மீது வைக்க வேண்டும். இது போன்ற நல்ல பழக்கவழக்கங்களில் மனிதன் ஈடுபடாமல் தனித்து இருப்பின் இறைவன் அவன் மீது கருணை புரிய மாட்டான்.

### சமூக வாழ்வில் செல்வம்

சமூகத்தில் செல்வம் மிக்கவர்கள் தம்மைப்போலவே தாம் பழகக் கூடியவரும் செல்வந்தராக இருத்தல் வேண்டும் என்று எண்ணுவது கூடாது. ஆனால், இதனை யாரும் உணரவில்லை என்பதே உண்மை. பணம் படைத்தவர் பணம் படைத்தவரிடமே பழகுகின்றார். பணம் இல்லாதவரோ தன்னைப் போலச் செல்வம் இல்லாதவரிடமே பழக நேரிடுகிறது. இதனால் இங்கே சமூகவியல் ஒற்றுமையானது செல்வத்தைக் கொண்டே தனித்தன்மை பெறுகிறது. இதில் இஸ்லாம் பொதுவாக மக்களிடையே சமூகம் சார்ந்த ஒற்றுமை நிகழவே ஜக்காத்[7] என்னும் நிலையினை மேன்மைப்படுத்தியுள்ளது. இதனை இறைவன்,

> செல்வம் உங்களிலுள்ள செல்வந்தர்களிடையே
> மட்டும் சுற்றிக் கொண்டிருக்கக் கூடாது (59:7)

எனத் திருமறையில் மொழிகிறான். செல்வம் செல்வந்தர்களிடையே இருப்பது கூடாது. அதனை ஏழைமக்களுக்கு அவர்கள் கொடுத்து உதவுதல் வேண்டும் என்று இறைவன் கூறுகின்றான். இது போன்ற செயல்களை நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு நாம் செய்யும் போது அவர்களுடன் கூடிய சமூக நல்லிணக்கம் வலுவடைகின்றது. இதன் மூலம் சமூகம் சிறந்த முறையில் மேலோங்குகின்றது.

**இஸ்லாமும் பிற சமயங்களும்**

இஸ்லாமிய மார்க்கமானது பிற சமய மக்களிடம் இஸ்லாமியர் பழகுவதைத் தடுக்கவில்லை. அவர்களைத் தம் குடும்பத்தில் உள்ளவர்களைப்போல் அன்பு கொண்டு அவர்களிடம் பழகச் சொல்லுகின்றது. இஸ்லாமியரல்லாதவர்களிடம் பிரிவினைக் காட்டி அவர்களைப் பிரிந்து வாழும் நிலையினைத் தடுக்கின்றது. சமூகத்தில் அனைத்துப் பிரிவினரும் வாழ்கின்ற நிலையினைக் காண்கின்றோம். ஆனால் அதனொடு இஸ்லாமியர்களும் வாழ வேண்டும் என்ற நிலையும் இருக்கின்றது. இதனை இஸ்லாம் தடுக்கவில்லை அவர்களோடும் இணக்கமாகப் பழகிக் கொள்ளுங்கள் என்கிறது.

**சமூக நிகழ்வுகள்**

சமூகத்தில் காணப்படும் பழக்க வழக்கங்களின் மூலம் பல நிகழ்வுகள் பண்டைய காலங்கள் முதல் இன்று வரை தொன்று தொட்டு நடைபெற்று வருகின்றன. இதில் பல்வேறு சமயத்தினரும் பல்வேறு நிகழ்வுகளைத் தம் அன்றாட வாழ்வில் மேற்கொண்டு வருகின்றனர், அதில் பிறப்பு முதல் இறப்பு வரையிலான சடங்குகள், விழாக்கள், திருமணம் போன்ற நிகழ்வுகள் அடங்கும். இதில் பொதுவாக அனைத்து சமயத்தினரின் நிகழ்வுகளிலும் இஸ்லாமியர்கள் கலந்து கொள்ளலாம். ஆனால், அதில் இணை வைக்கும் நிகழ்வும், ஹராம் என்னும் அனுமதிக்கப்படாத உணவுகளை உண்பதும் தவிர மற்ற அறச்செயல்களில் கலந்து கொள்வதில் எந்தவித தவறும் இல்லை. இதனை இறைவன்,

> என் இறைவன் ஹராம்[8] எனத் தடுத்திருப்பவையெல்லாம், வெளிப்படையான அல்லது அந்தரங்கமான, மானக்கேடான செயல்கள்; பாவங்கள் (7:33)

என்று இறைவன் திருமறையில் கூறுகின்றான். ஹராம் எனத் தடுத்திருப்பவையெல்லாம் சிலவை வெளிப்படையாகத் தெரியக்கூடியவை ஆகும். சில வெளிப்படையாகத் தெரியாமல் இருக்கும். அதனை இறைவனே அறிவான். ஏனெனில் இறைவன் அனுமதிக்காததை இஸ்லாமியன் தனது வாழ்க்கையில் தடுத்துக்கொள்ளுதலே அவசியமானதாகும்.

**ஹலால் ஹராம்**

இறைவனால் தடுக்கப்பட்டவை ஹராமாக இருக்கின்றது. ஆனால், ஹராம் என்ற பொருளினை மீறி உண்பவன் பாவம் செய்பவனாகக் கருதப்படுகின்றான் என்பது இறைவனால் கூறப்பட்டது.

> அல்லாஹ் பாவம் செய்யும் மக்களுக்கு நேர்வழி காட்டமாட்டான் (5:108)

என்று திருமறையில் இறைவன் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றான். பாவம் என்பது பெரும் பாவம், சிறுபாவங்கள் என்று பகுக்கப்படுகிறது. அதில் பெரும் பாவமாக இறைவன் தடுத்திருப்பது இணை வைப்பதே ஆகும்.

> திண்ணமாகத் தனக்கு இணை வைப்பதை அல்லாஹ் மன்னிக்கவே மாட்டான்: இது தவிர அனைத்தையும் தான் நாடுகின்றவர்களுக்கு அவன் மன்னித்து விடுவான்: எனவே யார் அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றானோ அவன் வழி கேட்டில் வெகுதூரம் சென்றுவிட்டான் (4:16)

என்று இறைவன் இணை வைப்பவர்களை மன்னிக்க முடியாத பெருங்குற்றம் செய்பவர்களாகக் கருதுகின்றான். இதில், மேலும் பல குற்றங்களுக்கு அதற்கு தகுந்தவாறு பாவங்களை எழுதுகின்றான். அப்பாவங்கள் மறுமை[9] நாளில் இறப்பிற்கு பின்பு எழுப்பப்பட்டு மனிதன் செய்த நன்மை தீமைகளைக் கணக்கிட்டு அதற்கு தக்கவாறு தண்டனைகளை வழங்குவான். அதில் நன்மைகள் அதிகமாக இருப்பின் சொர்க்கம்[10] என்னும் சிறந்த இடத்தினை அளிப்பான்.

அங்கு மனிதன் என்றும் இறப்பு இல்லாத வாழ்வினை வாழக்கூடியவனாக இருப்பான் என்று இஸ்லாமிய மார்க்கம் கூறுகின்றது.

**ஹலால்**

ஹலால்[11] இறைவனால் அனுமதிக்கப்பட்டு அதனை மனிதர்கள் தங்களின் வாழ்க்கையில் கடைப்பிடிக்கக் கூடிய நற்காரியங்கள் ஆகும். ஹராம் அல்லாத அனைத்தும் ஹலால் ஆகும். இறைவன் திருமறையில் ஹராமாக்கப் பட்டவைகளை கூறுகின்றான். ஏனெனில் அதனைத் தவிர மற்றவை அனைத்தும் ஹலால் என்று கொள்ளுதல் வேண்டும். இறைவனால் அனுமதிக்கப்பட்டவை ஆகும். இவை பொதுவாக அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் அனைத்திலும் கலந்திருப்பவை என்று கூறலாம்.

மனிதன் தன் வாழ்வில் உண்பது, உடுத்துவது போன்று அன்றாட வாழ்வில் சமூகத்தில் பழகும் நிலை போன்றவைகளின் மூலம் காணப்படும் அனைத்திலும் இறைவனின் அனுமதி உள்ளது. இதனைக் கொண்டு சமூகத்தில் வாழ்வதன் மூலம் சமூகத்தில் நற்பேறுகளை அடைய முடியும் என்பது திருமறை இஸ்லாமியர்களுக்கு எடுத்துரைக்கின்றது.

**சமூகம்**

சமூகம் என்பது பல்வேறு மக்களிடையே ஓர் ஒற்றுமையையும் இணக்கத்தையும் கொண்டதாகும். பலர் சேர்ந்து ஒரு குழுவாக வாழக்கூடிய நிலையினைச் சமூகத்தில் நிலவுகிறது. அவர்கள் யாவரும் ஒரே சமூகத்தினர் என்றும் சொல்லுமளவிற்கு அவர்கள் பாரம்பரியமாக அதே இடத்தில் வாழ்ந்திருத்தல் வேண்டும். இப்படி வாழக்கூடிய மக்களை ஒரு சமூகத்தினர் என்று கூறுவர். ஒரு சமூகத்தைச் சார்ந்த மக்கள் பலதரப்பட்ட இடங்களிலும் வெவ்வேறு சமூகத்தினர்களுடனும் வாழ்வது உண்டு. சமூகத்தினைப் பற்றி, "பிறப்பு முதல் இறப்பு வரையிலும் மனிதர்கள் சமூக சூழ்நிலைகளில் பங்கு பெற்று வாழ்கின்றனர். மற்றும் ஒருவரையொருவர் சார்ந்து வாழ்கின்றனர்"[12] என்கிறார் சரஸ்வதி.

பிறக்கின்ற மனிதன் தன் வாழ்நாளில் பலரின் உதவி கொண்டு வளர்கின்றான். இதனால் பலரிடம் பழகும் நிலை ஏற்படுகிறது. அப்படி வளர்ந்த மனிதன் தன் வாழ்வில் ஒரு அங்கம் வகிக்க வியாபாரத்திற்காகவும்

வாழ்க்கையின் சூழ்நிலைக்காகவும் பலரிடம் பழகும் நிலையுண்டாகிறது. இதன் மூலம் மனிதன் சமூகத்தில் வலை பின்னல்களாகப் பின்னி இணைக்கப்படுகின்றான். இதனை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்,

> படைப்புகள் அனைத்தும் இறைவனின் குடும்பமாகும். அவற்றை நேசிப்பவனே இறைவனை நேசிப்பவனாவான்[13] (நூல்: பைஹகி)

எனக் கூறுகிறார். படைப்புகள் அனைத்தும் ஒரே குடும்பமாகும். இவை சமூகத்தின் வழி நின்று நோக்கும்போது ஒரே சமூகமாகத் திகழ்வதை இந்த நபி மொழியின் கூற்றின் படி உணரலாம்.

**சமூகத்தில் பிளவுகள்**

மனிதன் ஒரே சமூகமாக வாழ்ந்து கொண்டிருக்கும்போது அதில் பிளவுகள் ஏற்படக்காரணமாக இறைவன்,

> (தொடக்கத்தில்) மக்கள் அனைவரும் ஒரே கொள்கை வழி நடக்கும் சமுதாயத்தவராகவே இருந்தனர். பின்னர் அவர்களிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றவே (நேர்வழியில் செல்வோருக்கு) நற்செய்தி அறிவிப்போராகவும் (தீய வழியில் செல்வோருக்கு) எச்சரிக்கை செய்வோராகவும் இறைவன் நபிமார்களை (இறைத்தூதர்களை) அனுப்பி வைத்தான். மேலும் மக்கள் வேறுபாடு கொண்ட விஷயங்களில் அவர்களிடையே தீர்ப்பு வழங்க வேண்டும் என்பதற்காக, சத்திய வேதங்களையும், அந்நபிமார்களுடன் இறைவன் அருளினான் (2:213)

என்று கூறுகிறான். இதில் மக்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்பட்டமையால் அவர்களிடையே பிளவுகள் ஏற்பட்டதாகவும் அதனால் அவர்களின் சமூகம் பிரிந்த நிலையினையும் கூறுகின்றான். மேலும் ஒவ்வொரு சமூகத்தினரிடமும் ஒவ்வொரு நபிமார்களை நாம் அனுப்பினோம் என்று இறைவன் கூறுகின்றான். இதனைக் கணக்கிடும்போது பல சமூகத்தினர் இருந்திருப்பதை உணர முடிகிறது. ஏனெனில் 1,24,000 நபிமார்கள் இறைவன் உலகத்திற்கு அனுப்பியிருப்பது இதன் மூலம் தெளிவுபடுகிறது.

**பல சமயச் சூழலில் இஸ்லாம்**

அனைத்துச் சமயங்களும் சமூகத்தை மையப்படுத்தி எடுத்துரைக்கும் கருத்துகளின் உள்ளார்ந்த நோக்கம், நல்லிணக்கத்தையும், சமூக உறவுகளையும் மேம்படச் செய்வதாகும். இதன் மூலமாக மனிதச் சமூகத்தில் அமைதியை நிலைபெறச் செய்தல் வேண்டும் என்ற அடிப்படையில் சமயங்களின் கருத்துகள் அமைந்திருப்பதைப் பல்வேறு சமய வரலாறுகளும், திருமறைக் கருத்துகளும் உணர்த்துகின்றன.

ஒரு சமயத்தின் வீழ்ச்சியும், வளர்ச்சியும் பரவலாக்கத் தன்மையும், அச்சமயம் மனித சமூகத்திற்கு முன் வைக்கும் சமூகச் செயல்பாடுகளின் அடிப்படையிலேயே அமையும். சமயங்கள் எடுத்துரைக்கும் சமூகச் செயல்பாடுகள் பற்றிய கருத்துரைகள் மாறிவரும் சமூகத்திற்கேற்ற போதனைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

குறிப்பிட்ட காலத்திற்குட்பட்டதாகவோ அல்லது குறிப்பிட்ட சகாப்தத்திற்கு உட்பட்டதாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட இனம் அல்லது மொழியினருக்கு மட்டும் உரியதாகவோ சமூகச் செயல்பாடுகள் பற்றிய கருத்துரைகளைச் சமயங்கள் முன்வைப்பதில்லை. காரணம் சமயங்கள் எடுத்துரைக்கும் சமூக உறவுகள் பற்றிய கருத்துகள் நிலையானவை. தெய்வீகத் தன்மை பொருந்தியவை. இவை எடுத்துரைக்கும் சமூக உறவுகள் பற்றிய சித்தாந்தங்களின் உண்மைத் தன்மைகளை உணர்ந்து நடைமுறைப்படுத்த முற்படும் எந்த ஒரு சமூக அமைப்பிலும் அமைதியும், ஆன்மீகமும், அன்பும், மனித நேயமும் மனிதாபிமானமும் இடம் பெற்றிருக்கும். இவ்வகையில் மனிதச் சமூகச் செயல்பாடுகளை மையப்படுத்திச் சமூக உறவுகள் பற்றி இஸ்லாம் இவ்வுலகிற்கு எடுத்துரைக்கிறது. இஸ்லாம் எடுத்துரைக்கும் சமூக உறவுகள் பற்றிய கருத்துகள் சமூக நல்லிணக்கத்திற்கு அடிப்படையாக விளங்குகிறது.

மனிதனின் தோற்றம் முதல் பல ஆயிரம் ஆண்டுகளாகத் தன்னுடைய விருப்பம், நலம் இவற்றை மட்டுமே முன்னிருத்தி வாழ்ந்து வந்தான். இதனைத்தான் சமூகவியலார் தனிமனித வாழ்வு எனக் குறிக்கின்றனர்.

தனிமனித வாழ்வு எத்தனை நூற்றாண்டுகளாக நீடித்தது என்பதற்கான தெளிவான வரலாறு நமக்குக் கிட்டவில்லை. எனினும் தனிமனித வாழ்வு ஒரு

குறிப்பிட்ட காலத்தில் குழுவாழ்வாகவும் பின் கூட்டு வாழ்வாகவும், பின் அதுவே சமூக வாழ்வாகவும் பரிணாமம் பெற்றது. இந்தப் பரிணாம மாற்றத்தின் பயனாகவே தனிமனித உணர்வில் மனிதனுக்கு மனிதன் வெறுப்பும், பகையும், பூசலும், பல்வேறான காரணங்களால் வளர்ந்து கொண்டு வருகின்றன. இப்போக்குச் சமூக நல்லிணக்கத்திற்குப் பெரிதும் தடையாக உள்ளது.

உலக அமைதிக்கு முரணான போக்குகள் என்ன என்பதைக் கணித்திடும் சமயங்கள் தத்தம் திருமறைகளின் மூலமாக சாந்தி, சமாதானம் ஆகிய கருத்தக்களுக்கு அடிப்படையான வழிமுறைகளை வகுத்துள்ளன. சமயங்களின் உண்மைத் தன்மையை உள்ளது உள்ளபடியே உணர்ந்து கொண்ட எந்தவொரு தனிமனிதனும், சமூக நல்லிணக்கத்திற்கு எதிராகச் செயல்பாடுகளில் நிச்சயமாக ஈடுபடமாட்டான் என்பது உண்மையாகும்.

**சமூகத்தின் அமைப்பு**

இன்றைய சூழலில் மனித சமூகத்தின் அமைதி என்பது குலம், இனம், பிறப்பு, மொழி, நிறம், நாடு அந்தஸ்து என்ற அடிப்படைக் காரணிகளால் சீரழிக்கப்படுகின்றன. மனிதர்கள் அனைவரும் தமக்கென உள்ள தனிப்பண்புகளின் அடிப்படையிலும், சில பொதுப் பண்புகளின் அடிப்படையிலும் வகைப்படுத்தப்படுகின்றன.

மனிதனின் பிறப்பால் ஏற்படும் தனிமனித வேறுபாடுகள் மனிதச் சமூகத்தில் இருப்பதைத் தவிர்க்க முடியாத யதார்த்தமாகச் சுட்டுகிறது இஸ்லாம். இதற்குக் காரணம் மனிதனின் தோற்றம், பெருக்கம், வளர்ச்சி ஆகியவற்றை ஏற்றுக் கொள்கிறது.

> “மனிதர்களே!” நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம், பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களைச் சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம் (49:13)

என்பது இறைமறையின் கருத்தாகும்.

இறைவன் எண்ணியிருந்தால் அனைவரையும் ஒரே இனமாகவோ, நிறமாகவோ, குலமாகவோ படைத்திருப்பான். ஆனால் இனப் பெருக்கத்தின்

இயற்கைப் போக்கை உணர்ந்தே இறைவன் அவரவர் பிறந்த இடத்திற்கும், சூழலுக்கும் ஏற்பச் சிற்சில வேறுபாடுகளைக் கொண்டு மனிதனைப் படைத்துள்ளான்.

மனிதனைப் பிறப்பால் வேறுபடுத்தும் மதம், இனம், ஜாதி, மொழி, நிறம், நாடு என்ற கூறுகளைக் களைந்தெறிந்து மனிதகுலம் அனைத்தும் ஒன்றே என்பதைத்தான் இஸ்லாம் வலியுறுத்துகிறது. மனிதனை வேறுபடுத்தும் கூறுகளுள் இன்றைய நிலையில் தலையாய தன்மை பெற்றுத் திகழ்வது அவரவர் சார்ந்த சமயமாகும். மனிதர்கள் தாங்கள் விரும்பும் சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றி ஒருவர் மற்றொருவருடன் கலந்து வாழும் சமூகச் சூழலைத்தான் பல சமூக அமைப்பு எனக் குறிப்பிடுகின்றனர்.

சமய வேறுபாடுகள் காரணமாகச் சமூகத்தின் அமைதிக்குக் களங்கம் வருவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. மாறாக இவ்வேறுபாடுகள் களைந்தெறியப்பட்டு மனிதகுலச் சமயத்துவம் உருவாக்கப்படுவதற்கான நிலையினையே இஸ்லாம் தன் திருமறையின் வசனங்களில் வெளிப்படுத்துகிறது. பல சமூக அமைப்பிற்கு ஏற்றவாறு வாழ்க்கை நெறிகளை இஸ்லாம் எடுத்துக்காட்டுவதன் மூலமாகச் சமூகத்தின் நல்லிணக்கத்திற்கான அடிப்படைப் பண்புகளை உருவாக்கிக்காட்டுகிறது.

**இஸ்லாம் காட்டும் சமூகவியல்**

இஸ்லாம் எடுத்துக் காட்டும் சமூகம், உலக அமைதி என்ற ஒரு இலட்சியத்தைக் குறிக்கோளாகக் கொண்ட சமூகம், இது இனம், மொழி, நிறம், வட்டாரம், சமயம் என்ற புறச் சூழல்களுக்கு அப்பாற்பட்ட நிலையில், இறைவனின் விருப்பம் என்ற நோக்கத்திற்குட்பட்ட அமைப்பாக இயங்குகிறது. இதன் காரணமாகத்தான் தம் திருமறையின் ஒவ்வொரு பகுதியிலும் எந்தவொரு குறிப்பிட்ட பிரிவினரையோ, இனத்தவரையோ நோக்கி விளிக்காமல் மனிதகுலம் அனைத்திற்கும், பொதுவாக மனிதர்களே! என விளித்துக் கூறுவதாக வசனங்கள் அமைந்துள்ளன. திருக்குர்ஆன் மனிதகுலம் முழுவதையும் வேறுபாடின்றிக் கண்ணியப்படுத்துகிறது.

> ஆதத்தின் வழித்தோன்றல்களுக்குக் கண்ணியம் அளித்துள்ளோம் (17:70)

எனத் திருமறை கூறுகிறது. எனவே, இஸ்லாம் எடுத்துக் காட்டும் சமூக வாழ்வுமுறை மனிதகுலம் அனைத்திற்கும் பொதுவான அமைதியை மட்டும் குறிக்கோளாகக் கொண்ட சமூக நல்லிணக்க நெறியாகவே அமைகிறது.

மனிதகுலம் அனைத்தும் சமம், மனிதகுலம் முழுவதும் ஒரே சகோதரப் பந்தத்தில் கட்டுண்டது எனும் அடிப்படை நம்பிக்கையின் மீது அமைந்துள்ளதே இஸ்லாமியச் சமய, வாழ்க்கை நெறி, இத்தகு சமூக நல்லிணக்க வாழ்விற்கு இஸ்லாம் ஒவ்வொரு தனிமனிதனையும், பொறுப்பாக்குகிறது. இறைவனின் விருப்பத்திற்குத் தம்மைத்தாமே அர்ப்பணித்துக் கொள்கிற செயல்மூலம் ஒவ்வொரு தனிமனிதனையும் நெறிப்படுத்திச் சமூக அமைப்பின் தகுதி வாய்ந்த பொறுப்புமிக்க அங்கத்தினனாக மாற்றிவிட முடியும் என்பதில் இஸ்லாம் நம்பிக்கைக் கொண்டுள்ளது. இந்நம்பிக்கையை நிறைவேற்றுவதன் மூலமாகவே சமூக நல்லிணக்கத்தைப் பேணிக் காக்க முடியும் என்ற கருத்தில் சமூக மேம்பாட்டிற்கான வழிமுறையை இஸ்லாம் வகுத்துக்காட்டுகிறது.

**முடிவுகள்**

❋ மனித குலம் அனைத்தையும் ஒரே குடும்பமாக இஸ்லாம் பார்க்கிறது.

❋ பல்வேறு நாடுகளாலும் மொழிகளாலும் மனிதர்கள் பிரிந்தாலும் இறைவழிபாட்டின்படி இணையக் கூடியதைக் காணமுடிகிறது.

❋ ஒருவர் மற்றவரைக் காட்டிலும் சிறந்தவருமில்லை, அவரைவிடத் தாழ்ந்தவருமில்லை. அனைத்து மக்களும் இறைவன் படைப்பில் சமம் என்ற நிலையினை இஸ்லாம் எடுத்துக்காட்டுகிறது.

❋ மனிதனைப் பிறப்பால் வேறுபடுத்தும் மதம், இனம், ஜாதி, மொழி, நிறம், நாடு என்ற கூறுகளைக் களைந்தெறிந்து மனிதகுலம் அனைத்தும் ஒன்றே என்பதைத்தான் இஸ்லாம் வலியுறுத்துகிறது.

❋ வசதி படைத்தவர்கள் செல்வம் நிறைந்தர்களிடத்தில் மட்டுமே பழகுதல் என்பது கூடாது. மாறாக ஏழைகளிடத்தும் பழகித் தம் செல்வத்தின்வழி அவர்களுக்கும் உதவ வேண்டும்.

❋ இஸ்லாமிய மார்க்கமானது பிற சமயத்தினரிடம் பழகுவதைத் தடுக்கவில்லை. அவர்களிடம் தம் குடும்பத்தில் உள்ளவர்களைப் போல் பழகச் சொல்கிறது.

## அடிக்குறிப்புகள்

1. மு. அப்துஸ் ஸமது, இஸ்லாத்தில் மனிதமதிப்பு, ப.23.
2. K.V.S . ஹபீப் முஹம்மத், (தொ.ஆ.), வேதவரிகளும் தூதர் மொழிகளும், ப.137.
3. மு. அப்துஸ் ஸமது, மு.நூ., ப.24.
4. K.V.S. ஹபீப் முஹம்மத், (தொ.ஆ.), ப.137.
5. மேலது., ப.138.
6. கே. ஜே. மஸ்தான் அலி பாகவி, மாநபி மணி மொழிகள், ப.269.
7. ஜக்காத் - ஏழைவரி.
8. ஹராம் - இறைவனால் தடுக்கப்பட்டவைகள்.
9. மறுமை - மறு உலகம்.
10. சொர்க்கம் - மறுமை நாளில் நன்மை புரிந்தோர்க்கு கொடுக்கப்படும் சிறந்த இடம்.
11. ஹலால் - இறைவனால் அனுமதிக்கப்பட்டவைகள்.
12. ச. சரஸ்வதி, சமூக உளவியல், ப.1
13. K.V.S. ஹபீப் முஹம்மத் (தொ.ஆ.), மு.நூ., ப.137.